**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 172/2024 P.W.5/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மோகன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் நாகர்கோவில் ஆயுதப்படையில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். 22.04.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் என்னுடன் உதவி ஆய்வாளர் முத்துலெட்சுமி என்பவரும், முதுநிலை காவலர் 2685, 2687, 2986 மற்றும் பெண் முதுநிலை காவலர் 2628 மற்றும் பெண் காவலர் 3130 ஆகியோர்கள் சகிதம் காவலர் வாகனத்தில் மாவட்ட சிறையிலிருந்து 7 கைதிகளை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இரணியலில் ஆஜர்படுத்துவதற்காக மதியம் 12.00 மணியளவில் வந்து நீதிமன்ற வராண்டாவில் காத்திருந்தோம்.

2. அப்போது கைதி ஜயப்பன், சிவா, விஜய் ஆகியோர்களை பார்ப்பதற்காக அவர்களது நண்பர்கள் வந்தார்கள். நாங்கள் அவர்களிடம் கோர்ட் முடிந்த பிறகு பேசுங்கள், இப்போது பேசவேண்டாம் என்று கூறினோம். மதியம் 02.15 மணியளவில் நீதிமன்றத்திலுள்ள காவலர்கள் காத்திருப்பு அறைக்கு அவர்களை அழைத்துச் செல்லும் போது மேற்படி 3 நபர்களும் எங்களை ஜெயிலில் தான் பார்க்கவிடமாட்டீர்கள், இங்கேயும் பார்க்க விடமாட்டீர்களா என்று கேட்டு தேவடியாமவனுவளா என்று கெட்டவார்த்தைகள் பேசினார்கள். மேலும் யூனிபார்ம் போட்டிருக்கிறீர்கள் என்று தான் விடுகிறோம். இல்லையென்றால் மண்டையை உடைத்துவிடுவோம் என்று கூறி இதற்கு மேலும் பேசினால் எங்கள் கழுத்தை நாங்களே அறுத்துக்கொள்வோம் என்று மிரட்டி எங்களை அரசு பணிச் செய்ய விடாமல் ஒரு மணி நேரம் தாமதப்படுத்தினார்கள்.

3. மற்ற கைதிகளையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துவிட்டு இரணியல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு அதன்பிறகு நாங்கள் கைதிகளை அழைத்துக்கொண்டு இங்கிருந்து சென்றுவிட்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

அ.சா1 எனது மேலதிகாரி என்றால் சரிதான். அவர் சொல்லக்கூடியதை நான் கட்டாயம் செய்து தான் ஆகவேண்டும் என்று சொன்னால் எல்லா விஷயங்களிலும் கிடையாது. அலுவல் விஷயங்கள் கேட்போம். அன்றையதினம் நான் கைதிகளுடன் முழுமையாக இருந்தேன் என்றால் சரிதான். அ.சா1ம் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரிதான்.

2. அன்றையதினம் கைதிகளை நீதிமன்றத்திற்கு அழைத்து சென்று வரும் பணி தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அன்றையதினம் 7 கைதிகளை அழைத்து வந்தோம். அன்றையதினம் நாங்கள் 7 பேர் பாதுகாப்பிற்கு வந்தோம். அன்றையதினம் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எத்தனை வழக்குகள் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

3. பொதுவாக சிறையில் இருந்து அழைத்துவரும் கைதிகளுக்கு விலங்கு போட்டு தான் அழைத்து வருவோம் என்றால் எல்லாருக்கும் இல்லை. M.O பார்த்துத் தான் செய்வோம். அன்றையதினம் கைதிகளுக்கு விலங்கு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். சிறைவாசிகள் அவ்வாறு நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படும்பொழுது அவர்களுக்கு எந்த தேவைகள் இருந்தாலும் எங்களிடம் தான் கேட்பார்கள் என்றால் சரிதான். முடிகின்ற விஷயங்களை நாங்கள் செய்து தருவோம். முடியாததை செய்யமாட்டோம். முடியாதது சம்மந்தமாக நாங்கள் அதை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வோம்.

4. அன்றையதினம் சிறைவாசிகளை சந்திப்பதற்கு எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் 3, 4 நபர்கள் வந்தார்கள். 12.30 மணிக்கு மேல் பார்க்க வந்தார்கள். நீதிமன்றத்தை ஒட்டியிருக்கின்ற பார்வையாளர்கள் இருக்கும் இடத்தில் என்றால் சரிதான். மேற்படி 3, 4 நபர்களை என்னால் அடையாளப்படுத்த முடியுமா என்றால் முடியாது. அவ்வாறு நண்பர்களை பார்க்கமுடியாது என்று நாங்கள் அனைவரும் சேர்ந்து சொன்னோமா என்றால் நானும், அ.சா1ம் சொன்னோம். நாங்கள் சொன்னவுடன் அவர்கள் அமைதியாக இருந்தார்கள் என்றால் அமைதியாக இல்லை, பேசிக்கொண்டிருந்தார்கள். என்ன பேசினார்கள் என்று ஞாபகமில்லை.

5. மேற்படி நீதிமன்றத்திற்கு வெளியில் நடந்த தகவலை நாங்கள் நீதிமன்றத்தில் நடுவரிடம் தெரிவித்தோமா என்றால் ஆம் தெரிவித்தோம். மேற்படி நீதிபதியிடம் இதே தகவலை தான் தெரிவித்தோமா என்றால் அ.சா1 தெரிவித்திருப்பார். குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவாவின் கைவிலங்கை அவிழ்க்கும் முன்னர் எங்களுடன் பாதுகாப்பு பணியில் வந்த ஒரு நபர் அவரை கை விலங்குடன் தள்ளிவிட்டதால் தான் ஏன் இப்படிசெய்கிறீர்கள் என்று கேட்டதற்கு தான் அ.சா1 மூலம் இந்த பொய்யான புகார் தரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. நான் உண்மைக்கு மாறான விவாத்தை இந்த நீதிமன்றத்தில் அ.சா1 ற்காக வேண்டி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் அன்றையதினம் எந்த நண்பர்களும் வரவில்லை என்றாலும், நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவாவின் மீதுள்ள காழ்புணர்ச்சியால் அவரது தந்தை மற்றும் சகோதரர் மீதும் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 172/2024 P.W.6/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. பிரபா | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் நாகர்கோவில் ஆயுதப்படையில் பெண் காவலராக பணி செய்து வருகிறேன். 22.04.2024 ம் தேதி காலை 10.00 மணி அளவில் மாவட்ட சிறையிலிருந்து கைதிகளை பெற்று இரணியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக அழைத்து வந்தோம். என்னுடன் என்னுடன் உதவி ஆய்வாளர் முத்துலெட்சுமி என்பவரும், தலைமை காவலர் மோகன், முதல்நிலை காவலர் டெல்வின் ஜோஸ், வினு, ஜெபின், பெண் காவலர் நதீனா மற்றும் நானும் மதியம் 12.00 மணியளவில் நீதிமன்றத்திற்கு வந்தோம்.

2. நீதிமன்ற வராண்டாவில் நாங்கள் இருந்தபோது கைதிகள் ஐயப்பன், சிவா, விஜய் ஆகியோர்களை பார்ப்பதற்காக அவர்களது நண்பர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் ஐயப்ப்ன், சிவா, சிவா ஆகியோர்களிடம் பேசவேண்டுமென்று கூறினார்கள். நாங்கள் அதற்கு நீதிமன்றத்தில் ஆஜர் செய்த பிறகு பேசலாம் என்று கூறினோம். பின்பு மதியம் 02.15 மணியளவில் இரணியல் நீதிமன்றத்திலுள்ள காவலர் அறைக்கு கைதிகளை அழைத்துச் செல்லும்போது கைதிகள் ஐயப்பன், சிவா, விஜய் ஆகியோர்கள் தேவடியாபுண்டாமவனே என்று கெட்டவார்த்தைகள் பேசி ஜெயிலில் பார்க்க வந்தால் அங்கேயும் அனுமதிக்கமாட்டீர்கள், இங்கேயும் அனுமதிக்க மாட்டீர்கள் என்று சொல்லி, யூனிபார்ம் போட்டிருக்கிறீர்கள் என்று பார்க்கிறோம், இல்லையென்றால் உங்கள் மண்டையை உடைத்துவிடுவோம் என்று கூறி, இல்லையென்றால் எங்கள் கழுத்தை நாங்களே அறுத்துக்கொள்வோம் என்றும் கூறினார்கள்.

3. மேலும், எங்களை அரசு பணி செய்யவிடாமல் ஒரு மணி நேரம் அலைக்கழித்தார்கள். மற்ற கைதிகளையும் சரியான நேரத்தில் ஆஜர் செய்யவிடாதபடிச் செய்தார்கள். அதன் பிறகு உதவி

ஆய்வாளர் இதுசம்மந்தமாக இரணியல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

நாங்கள் கைதிகளை வெளிக்காவல் எடுத்த பிறகு நீதிமன்ற பணி முடியாமல் மீண்டும் செல்லமாட்டோம் என்றால் சரிதான். நீதிமன்ற பணி எத்தனை மணிக்கு முடியும் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இதற்கு முன் நான் கூட்டி வந்ததில்லை. அதன் பிறகும் கூட்டி வந்ததில்லை. இதுபோல் வெளிக்காவல் பணிக்கு நான் செல்வது உண்டா என்றால் உண்டு.

2. அன்றையதினம் பணி முடிந்து எத்தனை மணிக்கு நீதிமன்றத்திலிருந்து கிளம்பினோம் என்றால் மாலை ஆகிவிட்டது, நேரம் தெரியவில்லை. அன்றையதினம் 7 கைதிகளை கூட்டி வந்தோம். அன்றையதினம் நீதிமன்றத்தில் 7 கைதிகளுக்கும் சாட்சி விசாரணை இருந்ததா என்றால் ஆம் இருந்தது. எத்தனை நபர்கள் பார்க்க வந்தார்கள் என்றால் கும்பலாக வந்தார்கள். நாங்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை தான் பார்த்துக்கொண்டிருந்தோம். நண்பர்கள் என்று தான் சொன்னார்கள்.

3. காலை 12.00 மணிக்கு நாங்கள் வந்துவிட்டோம். அதன்பிறகு தான் அவர்கள் வந்தார்கள். நான் சொன்ன சம்பவம் காவல் அறைக்கு செல்லக்கூடிய வழியில் என்றால் சரிதான். சம்பவயிடம் Bar க்கு முன்பு வைத்து நடந்தது. நான் சொல்வது போல் அன்றையதினம் நண்பர்கள் யாரும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பார்க்க வரவில்லை என்றால் சரியல்ல. அன்றையதினம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவாவின் கைவிலங்கை அவிழ்க்கும் முன்னர் எங்களுடன் இருந்த காவலர் அவரை தள்ளிவிட்டதால் ஏன் இப்படி பண்ணுறீங்க என்று கேட்டதற்கு பொய்யாக அ.சா1ன் உத்தரவிற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும், இந்த வழக்கிற்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது சிறைவாசிகளின் உரிமைகள் மீறப்படாமல் ஆஜர்படுத்தவேண்டுமென்றால் சரிதான். நாங்கள் அவ்வாறு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 172/2024 P.W.7/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. நதீனா | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் நாகர்கோவில் ஆயுதப்படையில் பெண் காவலராக பணி செய்து வருகிறேன். 22.04.2024 ம் தேதி காலை 10.00 மணிக்கு சிறைகைதிகளை எடுப்பதற்காக பெண் உதவி ஆய்வாளர், தலைமை காவலர் மோகன், முதன்மை காவலர் 4 நபர்கள் மற்றும் நானும் 7 கைதிகளை சிறையிலிருந்து எடுத்து இரணியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக சுமார் மதியம் 12.00 மணியளவில் அழைத்து வந்தோம். அவர்களை கோர்ட் வராண்டாவில் அமத்தியிருந்தோம்.

2. அப்போது கைதிகள் சிவா, விஜய், ஐயப்பன் ஆகியோர்களை பார்ப்பதற்காக அவர்களது நண்பர்கள் வந்திருந்தார்கள். அப்போது அவர்கள் சிவா, விஜய், ஐயப்பன் ஆகியோர்களிடம் பேசவேண்டுமென்று கூறினார்கள். எங்கள் இன்சார்ஜ் ஆபிசர் அவர்களிடம் கோர்ட்டில் ஆஜர் செய்த பிறகு பேசலாம் என்று கூறினார். மதியம் 02.15 மணி அளவில் நீதிமன்ற வளாகத்திலுள்ள காவலர் ஓய்வெடுக்கும் அறையில் கைதிகளை அழைத்துச் செல்லும்போது சிவா என்பவர் நண்பர்கள் இங்கு வந்தாலும் பார்க்க விடமாட்டேங்கிறீங்க, சிறைக்கு வந்தாலும் பார்க்க விடமாட்டேங்கிறீங்க, யூனிபார்ம் போட்டிருக்கிறீர்கள் என்று பார்க்கமாட்டேன், மண்டையை அடித்து உடைத்து விடுவேன் என்று கூறினார்.

3. இதற்கு மேலும் மிரட்டினால் நாங்கள் அனைவரும் எங்களுடைய கழுத்தை அறுத்துக்கொள்வோம் என்றும் மிரட்டினார்கள். எங்களுடைய அரசுப்பணியைச் செய்யவிடாமல் ஒரு மணி நேரம் இதனால் தாமதப்படுத்தினார்கள். அருவருப்பான வார்த்தைகளை அவர்கள் பேசியதால் எங்களுக்கு மிகவும் மனஉளைச்சலாக இருந்தது. இவர்கள் இவ்வாறு செய்ததால் மற்ற சிறைக்கைதிகளையும் எங்களால் சரியாக பார்க்க விடாதபடி செய்தார்கள். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

மதியம் 02.00, 02.30 மணி உணவருந்தும் நேரம் என்றால் சரிதான். நண்பர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் சரியாக நேரம் தெரியவில்லை, 12.00 மணிக்கு மேல் வந்தார்கள். சிறையிலிருந்து நேராக நீதிமன்றத்திற்கு தான் வந்தோம். சிறையிலிருந்து 1மணி நேரத்தில் நீதிமன்றத்திற்கு வந்துவிடலாம் என்றால் சரிதான். நண்பர்கள் 3 பேருக்கு மேல் இருப்பார்கள். நாங்கள் அக்கியூஸ்சை தான் கவர் பண்ணுவோம். நண்பர்கள் வந்ததைப்பார்த்தேன்.

2. நண்பர்கள் வந்த நேரத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அமைதியாக தான் இருந்தார்கள். நீதிமன்றத்தில் எத்தனை மணிக்கு அழைத்தார்கள் என்றால் ஒரு வழக்கு 1 மணிக்கு மேல் அழைத்தார்கள். மீதம் உள்ள வழக்குகள் 03.00 மணியிலிருந்து 04.00 மணிக்குள் அழைத்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அன்றையதினம் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவாவின் கைவிலங்கை அவிழ்க்கும் முன்னர் எங்களுடன் இருந்த காவலர் அவரை தள்ளிவிட்டதால் ஏன் இப்படி பண்ணுறீங்க என்று கேட்டதற்கு பொய்யாக அ.சா1ன் உத்தரவிற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும், இந்த வழக்கிற்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது சிறைவாசிகளின் உரிமைகள் மீறப்படாமல் ஆஜர்படுத்தவேண்டுமென்றால் சரிதான். நாங்கள் அவ்வாறு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.